தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2026

**15 வயதுப்பிரிவு**
(01.01.2011 – 31.12.2012 வரையில் பிறந்தோர்)

## உலகம் வியக்கும் உன்னத தலைவர் தமிழீழத் தேசியத்தலைவர்

தாய்மண்ணிலே உரிமைகள் மறுக்கப்பட்டு ஈழத்தமிழினம் தவித்து நின்றபோது, விடிவெள்ளியாய் முளைத்த வீரன் தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன்! பகைவர் நடுங்கப் படை நடத்தி, எம் இனமானம் காத்து நின்ற காவலன்! எம்மை நல்வழிப்படுத்த தமிழன்னை தந்த பேரொளி! 'தமிழீழ மண்ணின் மீட்சி, தமிழர் ஆட்சி' என எம் உரிமைகளை உலகுக்கு உரக்கச்சொன்ன போராளி!

பல நூறு ஆண்டுகளாக அடிமைப்பட்டுக்கிடந்த இனத்துக்கு விடுதலை விழிப்புணர்வை ஏற்படுத்தி, அடிபணிய மறுத்து, ஆதிக்க அரசுக்கு எதிராகப் போராடக் கற்றுக் கொடுத்தவர். கடுகளவு வலுவோடு கடலளவு பகை வெல்லும் மலையளவு நெஞ்சுறுதியை எமக்குத் தந்தவர்.

வீரத்தின் விளைநிலமாக ஈழத்தை உயர்த்தியவர். உலகப் போரியல் வரலாற்றுக்குப் புதிய பக்கங்களைத் திறந்தவர். எதற்கும் அசையாத, அஞ்சாத, துணிவான, நேர்மையான, ஒழுக்கமான ஒரு மக்கள் இயக்கமாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைக் கட்டமைத்தவர்.

வல்லரசுகளின் கட்டளைகளுக்கு அடிபணியாதவர். அதிகார இறுமாப்புகளுக்கு அடங்காதவர். பந்த பாசங்களுக்குள் முடங்கிவிடாதவர். சலுகைகளுக்காக சமரசம் செய்யாதவர். சன்மானங்களுக்கு மயங்கிவிடாதவர். யாரிடமும் விலை போகாத தேசத் தலைமகன் எங்கள் ஆருயிர் தலைவர்!

உலக விடுதலைப் போராட்ட வரலாற்றில் வேறெங்குமே நடந்திடாத பெரும் தியாகங்கள் பலவற்றை தன்னுள்ளே தாங்கி நிற்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வழிநடத்தியவர் எங்கள் தலைவர். தன் சொந்த மக்களின் வலிமையை மட்டும் கொண்டு, மண்மீட்புப் போர் நடைபெற்ற காலத்திலேயே உறுதியான கட்டமைப்புகளை உருவாக்கிய தமிழீழத் தேசியத்தலைவரைப் போன்று ஓர் உன்னத தலைவரை இதுவரை உலகம் கண்டதில்லை. அவரது பன்முக ஆற்றலையும் சிந்தனையையும் உலகம் அறிந்து கொள்ளுதல் அவ்வளவு எளிதன்று! தமிழீழத் தேசியத்தலைவர் எங்கள் அடையாளம். அவர் எமது அரண்.

உலகம் வியக்கும் எங்கள் உன்னத தலைவரின் வழிகாட்டலில் நடாத்தப்படும் எமது போராட்ட இலட்சியத்திற்கு காலமும் வரலாறும் நீதி வழங்கியே தீரும். இலட்சம் இடிகள் விழுந்தாலென்ன! ஆயிரம் காரிருள் சூழ்ந்தால் என்ன! மலரும் மலர்கள் மலர்ந்தே தீரும். அடையாதது வேண்டுமானால் இருக்கலாம்! அடைய முடியாதது என்று எதுவும் இல்லை! என்றோ ஒரு நாள் பூமிப்பந்தில் தமிழீழம் மலர்ந்தே தீரும். எங்கள் சூரியத்தேவனை உலகமே படிக்கும்!

"தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம்"